# உடல்நலன் பற்றிய கவலைகள்

# சிஎம்வி ரெடினைட்டிஸ்

## சிஎம்வி ரெடினைட்டிஸ் என்றால் என்ன?

- சிஎம்வி ரெடினைடிஸ் ஒரு தீவிரமான கண் தொற்று நோய், இது குருடுத்தன்மையை ஏற்படுத்தலாம். சிஎம்வி (சைடோமெகாலோ வைரஸ்) எனும் வைரஸ் கிருமியினால் இது ஏற்படுகிறது.
- சிடி4 எண்ணிக்கை 50-ற்கும் கீழே உள்ள ஹெச்ஐவி உள்ளவர்களுக்கு இந்த நோய் அதிகம் தாக்கும் அபாயம் உள்ளது.

## சிஎம்வி ஒருவரை எவ்வாறு தாக்குகிறது?

- சிஎம்வி ஒரு சாதாரண கிருமி. பெரும்பாலானோர் தமது வாழ்க்கையில் எப்போதாவது இந்த கிருமியினால் தாக்கப்பட்டிருக்கக்கூடும். நல்ல ஆரோக்கியமான எதிர்ப்பு சக்தி உள்ளவர்களில் பொதுவாக இந்த கிருமி நோயை உண்டாக்காது.
- பலவீனமான எதிர்ப்பு சக்தி (உடல் உறுப்புகள் பொருத்தப்பட்டவர்கள், புற்று நோய்கான கீமோதெரபி எடுத்துக் கொள்பவர்கள் அல்லது எய்ட்ஸ் உள்ளவர்கள்), கொண்டவர்களில், சிஎம்வி கடுமையான நோய் ஏற்படுத்தக்கூடும்.

## சிஎம்விக்கான அறிகுறிகள் என்னென்ன?

- உங்கள் கண்கள், சுவாசப்பை, வயிறு, குடல் மற்றும் மூளை உட்பட்ட உடலின் பல பாகங்களை சிஎம்வி தாக்கலாம். இதன் அறிகுறிகள் மாறுபடலாம். ஆனால் பொதுவாக சிஎம்வி பாதிப்பது கண்களைத்தான்.
- சிஎம்வி ரெடினிடிஸ்-ல் கண்களின் விழித்திரை (ரெடினா) சிஎம்வி-யால் பாதிக்கப்படுகிறது. மங்கலான பார்வை, குருட்டு புள்ளிகள் (ப்ளைண்ட் ஸ்பாட்ஸ்) மற்றும் 'ப்ளோட்டர்ஸ்' (கண்களில் நகருவது போல் தோன்றும் கருந்திட்டுக்கள்) உட்பட்ட அறிகுறிகள் ஏற்படலாம். இதில் பொதுவாக வலி இருக்காது, ஆனால் விரைவில் மோசமடைந்து, முடிவில் குருட்டுத்தன்மை ஏற்பட்டு விடும். உங்கள் பார்வையில் ஏதாவது மாற்றம் இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் காண்பிக்க வேண்டியது மிகவும் அவசியம், இதனால் விரைவில் சிகிச்சையும் தொடங்கலாம்.

## சிஎம்வி ரெடினைட்டிஸ்-ஐ நான் எவ்வாறு தடுக்க முடியும்?

- பலவீனமான எதிர்ப்பு சக்தி (சிடி4 எண்ணிக்கை 50-ற்கும் குறைவாக இருந்தால்), உள்ளவர்களை மட்டுமே சிஎம்வி தாக்குவதால், இதை தடுக்க சிறந்த வழி ஆரோக்கியமாக இருந்து உங்கள் சிடி4 செல்களை உயர்ந்த அளவில் வைப்பதுதான்.
- ஹெச்ஐவி மருந்துகள் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியின் ஆரோக்கியத்தை பராமரித்து உங்கள் சிடி4 எண்ணிக்கையை அதிகமாக வைத்திருக்கும்.



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca
CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

- உங்கள் குடும்ப டாக்டர் அல்லது கண் மருத்துவரிடம் முறையாக சென்று பரிசோதித்துக்கொள்ளவதால் சிஎம்விரெடினைடிஸ்-ஐ விரைவிலேயே கண்டுபிடித்துவிடலாம்.

## சிஎம்வி ரெடினைட்டிஸ்-ஐ எவ்வாறு குணப்படுத்தலாம்?

- சிஎம்வி ரெடினைட்டிஸ்-ற்கான சிகிச்சை முறையில் பொதுவாக மருந்து, ஊசி மூலம் நரம்பு வழியாகவோ (ஐவி) அல்லது நேரடியாக பாதிக்கப்பட்ட கண் (கண்களில்) செலுத்தப்படுகிறது.
- சிஎம்வி-ஐ குணப்படுத்த பயன்படுத்தப்படும் மருந்துகள்:
  - கேன்சிக்ளோவிர் (சைடோவின்) மற்றும் வால்கன்சைக்ளோவிர் (வால்சைட்)
  - பாஸ்கார்நெட் (பஸ்காவிர்)
  - சிடோபோவிர்
- மருந்துகள் சிஎம்வி வைரஸை அழிப்பதில்லை, ஆனால் சிஎம்வி உங்கள் உடலில் பரவுவதை தாமதப்படுத்துகிறது. பொதுவாக சிகிச்சையை ஆயுட்காலம் முழுவதும் எடுத்துக்கொள்ள வேண்டும். நரம்பு மூலமாக செலுத்தப்படும் மருந்து என்றால், பொதுவாக ஒரு நிரந்திரமான நரம்புவழியான பாதை இவர்கள் உடலில் ஏற்படுத்துகிறது, இதன் மூலம் இவர்களுக்கு தினசரி மருந்து அளிக்கப்படும். சில நேரங்களில், கிருமி நிலையாக இருந்தால் பராமரிப்பு சிகிச்சை முறையில் கேன்சிக்ளோவிர் அல்லது வால்கான்சிக்ளோவிர் மாத்திரைகள் வாய் மூலமாக எடுத்துக்கொள்ளலாம்.
- ஹெச்ஐவி சிகிச்சை முறைகளில் பல நவீன சிகிச்சைகள் அண்மையில் ஏற்பட்டுள்ளதால், சிலரின் சிடி4 எண்ணிக்கையிலும் பொதுவான உடல் ஆரோக்கியத்திலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இவர்கள் சிஎம்விக்கான சிகிச்சையை நிறுத்த முடியும். இதன் சாத்தியக் கூறுகள் பற்றி உங்கள் மருத்துவரிடம் கலந்து பேசுங்கள்.

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் ஏய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய ஏய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem